TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 AUG 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1971 ஜூன் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. எச். பி. அரி கௌடர் அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீலகிரி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையில் 1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. எச். பி. அரி கௌடர் அவர்கள் தம் 78-ம் வயதில் 27—6—1971-ம் நாளன்று இரவு இயற்கை எய்திவிட்டார் என்பதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது குடும்பத்தினருக்கு இப் பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் நான் தெரிவிக்கிறேன். மறைந்த உறுப்பினருக்கு நம் இரங்கலைத் தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து மௌனமாக நிற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நின்றனர்.

2. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Panchayat Unions Revenue Enquiry Committee.

* 76 Q.—Dr. H. V. HANDE :

THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Committee which went into the scope for improving the revenue of Panchayat Unions has submitted its report;

(*b*) if so, whether a copy of the report or its recommendations will be placed on the Table of the House; and

(*c*) when a decision on the recommendations will be taken?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஊராட்சி ஒன்றியங்களின் தற்போதைய பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கான வழி வகைகளை ஆய்வு செய்து அறிவிக்கும்படி அமைக்கப்பட்ட